# அராஜகத்தை முதல் நாளிலேயே தொடங்கிய அமைச்சர் நிர்மல் குமார்!

## திருப்பரங்குன்றம் கோவிலில் விதியை மீறி நுழைந்தார்!

மதுரை, மே 17-

அரசு பணிகளில் ஜோதிடர் நியமனம், அறநிலையத்துறை செயலாளர் பொறுப்புக்கு பார்ப்பன பெண் என தொடர்ந்து சர்ச்சையை சந்தித்து வரும் நிர்வாகத் திறனற்ற த.வெ.க. அரசு மற்றும் அதன் பொறுப்பற்ற அமைச்சர்களின் செயல்பாடு அவர்களின் அராஜகம் நாள்தோறும் வெட்ட வெளிச்சமாகி வருகிறது.

அதிலும் மதுரையில் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் தான் பதவி ஏற்று மதுரைக்கு வந்த முதல் நாளில் அமைச்சர் சி டி ஆர் நிர்மல் குமார் நடந்து கொண்ட விதம் அனைவரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

சென்னையிலிருந்து மதுரை வந்த அமைச்சர் நிர்மல் குமார் திருப்பரங்குன்றம் தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். அவர் மதியம் 12:55 மணிக்கு சுப்பிரமணிய சுவாமி கோயிலில் தரிசனம் செய்ய வந்தார். கோயில் முன் கட்சியினர் அவரை வரவேற்றனர்.

கோயிலுக்குள் சென்ற அமைச்சருக்கு கோயில் சார்பில் பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது. துணை கமிஷனர் ஞானசேகரன், அறங்காவலர்கள் சண்முகசுந்தரம், ராமையா, கண்காணிப்பாளர் சத்தியசீலன் வரவேற்றனர். பின் அமைச்சர், ஆதரவாளர்கள் 50க்கும் மேற்பட்டோருடன் மூலஸ்தானம் சென்று தரிசனம் செய்து திரும்பினார்.

கோயிலில் வழக்கமாக மதியம் 12:30 மணிக்கு உச்சிகால பூஜை துவங்கும்.

மதியம் 12:45 மணிக்கு கோயில் ராஜ கோபுரத்தின் கீழ் உள்ள மண்டபத்தில் உள்ள பெரிய கதவுகள் சாத்தப்படும்.

பக்தர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விழா காலங்களில் மட்டும் மதியம் நடை சாத்தப்படாமல் பக்தர்கள் அனுமதிக்கப்படுவர்.

நாட்களிலும், திருமண நாட்களிலும் வழக்கம் போல் மதியம் 12:45 மணிக்கு மேல் பக்தர்கள் கோயிலுக்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். அதற்கு முன்பே கோயிலுக்குள் சென்ற பக்தர்கள் தரிசனம் முடித்து வெளியேறிய பின் நடைசாத்தப்படும்.

அமைச்சர் நிர்மல் குமார் மதியம் 1:00 மணியளவில் கோயிலுக்குள் சென்றார். மதியம் 1:06 மணிக்கு மூலஸ்தானத்தில் ஆதரவாளர்களுடன் தரிசனம் முடித்து மதியம் 1:15 வெளியில் வந்தார். அதன் பின்பே கோயில் நடை சாத்தப்பட்டது.

வழக்கமாக பக்தர்கள் மூலஸ்தானத்தில் தரிசனம் முடித்து மடப்பள்ளி மண்டபம், சஷ்டி மண்டபம் வழியாக வெளியில் அனுப்பப்படுவர். அமைச்சருக்காக பெரிய நிலை கதவு திறக்கப்பட்டு முன் பக்க வாசல் வழியாக வெளியே அனுப்பப்பட்டார்.

அமைச்சர் மூலஸ்தானத்தில் தரிசனம் செய்த வீடியோ சமூக வலைதளங்களிலும் வைரலாக பரவியது. பக்தர்கள் கடும் அதிருப்திக்குள்ளாகினர். மாற்றம் என்று கருதி வாக்களித்த மக்களுக்கு ஏமாற்றம் மட்டுமல்ல இனி இது போன்ற விதி மீறல்கள் தான் பரிசா என பக்தர்களின் புலம்பல் கேட்டது.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, கழக கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தனது பிறந்த நாளையொட்டி குடும்பத்தினருடன் சென்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளார்.

## பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலை உயர்வு:

# சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக்குறி!

## ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, மே 17-

ஒன்றிய பா.ஜ.க. அரசு பெட்ரோல், டீசல், சி.என்.ஜி. விலையை உயர்த்தியதற்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில், இந்த விலை உயர்வால் சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக் குறியாகப் போகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிக்கை வருமாறு:



**மக்களின் தலையில் அடுத்தடுத்து பாரத்தைப் போடுகிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!**

**ஏற்கெனவே வணிகப் பயன்பாட்டுக்கான சிலிண்டரின் விலையை உயர்த்தியதால் அனைத்துப் பொருட்களின் விலையும் ஏறி விட்டது.**

**இந்நிலையில், இன்று அறிவிக்கப் பட்டிருக்கும் பெட்ரோல், டீசல், CNG விலை உயர்வால் சாமானிய மக்களின் வாழ்வாதாரமே கேள்விக் குறியாகப் போகிறது.**

**இதில் இருந்து மக்களை எப்படிக் காக்கப் போகிறது ஒன்றிய அரசு?**

இவ்வாறு அவர் தனது கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## கஜானா காலி என்ற புதிய மோசடி போர்வையை காட்டி தப்பிக்க நினைத்த

# புதிய முதலமைச்சருக்கு மாவட்ட தி.மு.க. கண்டனம்!

## திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

திருவண்ணாமலை, மே 17-

2026ஆம் ஆண்டு பிப்ரவரியில் கழக அரசின் நிதி நிலை அறிக்கையில், அரசின் நிதி குறித்து தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், கஜானா காலி என்ற புதிய மோசடி போர்வையை காட்டி தப்பிக்க நினைத்த, தமிழக புதிய முதல்வர் விஜயின் அறிக்கையை இந்த மாவட்டக் கழகம் கண்டிக்கிறது என பல்வேறு தீர்மானங்கள் திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்களை விளக்கி, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சரும், சட்டமன்ற தி.மு.க. கொறடாவுமான எ.வ.வேலு அவர்கள் சிறப்புரையாற்றினார்.

15.05.2026 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு, திருவண்ணாமலை, திருக்கோவிலூர் ரோடு, சாரோனில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில், திருவண்ணா மலை தெற்கு, வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தெற்கு மாவட்ட அவைத் தலைவர் கோ. கண்ணன் தலைமை வகித்தார்.

முன்னாள் சட்டப் பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, வடக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி., வடக்கு மாவட்ட அவைத் தலைவர் இரா. ராஜசேகர் ஆகியோர்



முன்னிலை வகித்தனர்.

செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சரும், சட்டமன்ற திமுக கொறடாவுமான எ.வ. வேலு அவர்கள் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அது வருமாறு:-

**இரங்கல் தீர்மானம்**

தேர்தல் பணிக்குழு முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறப்பினருமான கழக மூத்த முன்னோடி மறைந்த பெ.சு.திருவேங்கடம் அவர்களின் துணைவியாரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் அவர்களின் தாயாருமான திருமதி.சகுந்தலாதிருவேங்கடம், முன்னாள் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் போளூர் சசிகலாசுப்பிரமணி, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இலக்கிய அணி தலைவர் சி.கே.பன்னீர்செல்வம், முன்னாள் வடக்கு மாவட்ட துணை செயலாளர் திருமதி. பிரேம குமாரி தீனதயாளன் ஆகியோரின் மறைவிற்கு இந்த மாவட்ட கழகம் ஆழ்ந்த இரங்கலையும். வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில், “எல்லோர்க்கும் எல்லாமும்” என்ற சமூக நீதி அடிப்படையில், கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சிக்கு 1கோடியே, 54 இலட்சம் வாக்காளர்கள் மொத்தத்தில் 31.4 சதவீதம் வாக்களித்த, வாக்காளப் பெருமக்களுக்கு இந்த செயற்குழுக் கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**சட்டமன்ற கழக நிர்வாகிகளுக்கு நன்றி!**

திமுக சட்டமன்ற கட்சியின் தலைவராக, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், துணைத் தலைவராக கே.என்.நேரு அவர்களையும், கொறடாவாக எ.வ.வேலு அவர்களையும், செயலாளராக தங்கம் தென்னரசு அவர்களையும், பொருளாளராக திரு. எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அவர்களையும், துணை கொறடாவாக கோவி.செழியன் அவர்களை தேர்ந்தெடுத்த கழகத் தலைவர் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த மாவட்டக் கழகம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் சாதனை நாயகரும், மண்ணின் மைந்தருமான அண்ணன் எ.வ. வேலு அவர்களை வெற்றி பெற வைத்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் இந்த மாவட்ட கழகம் கோடான கோடி நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

அதேபோல் வந்தவாசி தொகுதியில் திரு. எஸ்.அம்பேத்குமார் அவர்களை வெற்றி பெறவைத்தமைக்கும், இந்த மாவட்ட கழகம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் இடத்திற்கு தள்ளி விட்டு, 2026 பிப்ரவரியில் நடைபெற்ற கழக அரசின் நிதிநிலை அறிக்கையில், அரசின் நிதி குறித்து தெளிவாக குறிப்பிட்டுள்ள நிலையில், கஜானா காலி என்ற புதிய மோசடி போர்வையை காட்டி தப்பிக்க நினைத்த, தமிழக முதல்வர் விஜயின் அறிவிப்பை இந்த மாவட்டக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

செயற்குழுக் கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா. ஸ்ரீதரன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு. தி.சரவணன், ஒ.ஜோதி,

தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆர். சிவானந்தம், ஆர்.வேல் முருகன், கே.வி.ராஜ் குமார், மாநில விவசாய தொழிலாளர் அணி துணைசெயலாளர் வ. அன்பழகன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் பிரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமிரமேஷ், மாநில தொ.மு.ச., பேரவைச் துணைத் தலைவர், க.சௌந்தரராசன், மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன்,

வடக்கு மாவட்ட துணை செயலாளர்கள் க.லோகநாதன், ஜெயராணி ரவி, மாவட்ட பொருளாளர் டி.ஏ.தட்சணாமூர்த்தி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.வி.சேகரன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ. ஆறுமுகம், மங்கலம் பிரபாகரன், ஜெ. மெய்கண்டன், பொன்.தனுசு, எச். சாதிக்பாட்சா, சி.ராம் காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு. சர்தார் காசீம், எஸ்.டி. ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், எல்.ஐ.சி. து.வேலு, இரா.அன்பரசு, கற்பகம்சரவணன், உ.நித்யா, நகர செயலாளர் மு.அன்பழகன், வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ.எஸ்.டி.கார்த்திகேயன், கோ.எதிரொலி மணியன், ஏ.எம்.சம்பத், மா.ஏழுமலை, என். கே.ஏ.பாபு, அ.மணிகண்டன், டாக்டர் மகேந்திரன், க.சீனுவாசன், பி.செல்வராஜன், ஜி.பி.அசோக், இ.மணிகண்டன், தொ.ப.சீ.மதிவாணன், சாது.ஆனந்த், ப.க.மணிவண்ணன், ஆர்.ராம்ரவி, சுந்தர்.கருணாநிதி, இப்ராஹிம் (எ) அமர்ஷெரீப், கே.ஏ. புஷ்பராஜ், மாலினி வினோத்திவாகரன், இராணிவெங்கடேசன், ர அப்சல்பாஷா, ஐ.எஸ். அமானுல்லா.,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் கே. விஸ்வநாதன், ஏ.தயாளன், கோ.தனசேகர், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ. சிவக்குமார், மு. பன்னீர் செல்வம், வி.பி.அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், ர.மெய்யூர். சந்திரன், த.ரமணன், பெ.கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி. மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா.ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் பி. மனோகரன், ஏ.எழில் மாறன், என்.டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், து.மாமது, ஏ. ஞானவேல், என்.சங்கர், எம்.தினகரன், ஜெ.கே. சீனுவாசன், ஏ.ஜி.திராவிடமுருகன், சி.கே.ரவிக்குமார், கே.பி.ஆர்.பி. பழனி, சி.ஆர்.பெருமாள், ப.இளங்கோவன், டி.ராதா, ஏ.சுந்தரேசன், கே.டி.ராமசாமி, சு.ராஜ்குமார், இரா.மகேஷ்,

தெற்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் நா.பழனி, து. கென்னடி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசி ராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி, எம். கிருஷ்ணமூர்த்தி, வெள்ளைகணேசன், ஆர். வெங்கடேஷ்பாபு, ஆ.மோகனவேல், ஆர். நந்தகுமார், அப்சர்லியாகத்பாஷா,

தெற்கு, வடக்கு மாவட்ட பேரூர் செயலாளர்கள் சி.கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், ஆர்.முருகன், வி.வெங்கடேசன், டி.கே.மோகன், கே. கோவர்தணன், வேணி ஏழுமலை, திருவண்ணாமலை மாநகர பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட பிரதிநிதிகள் உட்பட சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக வடக்கு மாவட்ட துணை செயலாளர் ந.பாண்டுரங்கன் நன்றி கூறினார்.



திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் வெற்றிபெற்ற முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் திருவண்ணாமலை மாநகரில் வீதி வீதியாக பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து பேசினார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், நிர்மலாவேல்மாறன், சீனி.கார்த்திகேயன், முகமது அனிபா, நாசர் உசேன், ராஜாராம், நதியா உட்பட பலர் உள்ளனர்.